பக்கங்கள்: எட்டு

யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible]

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 03 வியாழக்கிழமை (18-07-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 152

# படையை விட்டு ஓடியவர்களால் தெற்கில் வன்முறைகள் அதிகரிப்பு!

## இவ்வாறு தப்பியோர் எண்ணிக்கை 20 ஆயிரம்

கொழும்பு, ஜூலை 18

**முப்படைகளையும் விட்டுத் தப்பியோடியோர் குழுக்களாகச் சேர்ந்து வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருவதால் தென்னிலங்கையில் வன்செயல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.**

**ஆயுதப் பயிற்சிபெற்ற சுமார் இருபதாயிரத்துக்கும் அதிகமானோர் இவ்வாறு படைகளை விட்டுத் தப்பியோடி வெளியே இருக்கின்றனர்.**

பி. பி. ஸி. தனது செய்திக் கண்ணோட்டத்தில் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

இராணுவத்தை விட்டு ஓடியோர் குற்றச் செயல்களில் ஈடுபடுவது அதிகரித்துள்ளது என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

ஆயுதம் தாங்கி கொள்ளைகளில் ஈடுபடுவதால் மக்களிடையே தொல்லை விளைவித்தல் முதலிய சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இராணுவத்தில் இருந்து ஓடிப்போன ஒருவரின் தலைமையில் இயங்கும் ஆயுதம் தாங்கிய குழு ஒன்று தென்னிலங்கை காலி அக்மீமனப் பகுதியில் அண்மையில் ஏழு பேரைக் கொன்றதாகக் கூறப்படுகின்றது.

இராணுவப் பயிற்சி பெற்ற 20 ஆயிரம் பேர் இப்படி படைகளை விட்டு ஓடியுள்ளனர். அவர்களிடம் ஆயுதங்கள் கூட இருக்கலாம்.

இவ்வளவு எண்ணிக்கையில் இராணுவத்தைவிட்டுத் தப்பி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் கான்ஸ்டபிள் சுட்டுக் கொலை

கொழும்பு, ஜூலை 18

கடந்த திங்கட்கிழமை காலை 6-30 மணியளவில் மன்னார் பொலீஸ் நிலையத்தினை நோக்கிச் சென்று கொண்டிருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத்தலைமையகம் தகவல் வெளியிட்டது.

(உ-3)

## லங்கா முடிதவில் மெயில் வான் தபால் பொதி

யாழ்ப்பாணம், ஜூலை 18

தற்போது காங்கேசன்துறை முகத்தை வந்தடைந்திருக்கும் 'லங்கா முடித' கப்பலில் யாழ். பிரதம தபாலகத்துக்குதபால்கள் எடுத்துச் செல்லும் 'மெயில் வான்', 45 சைக்கிள்கள் 200 க்கும் மேற்பட்ட வெளியூர் தபால் பொதிகள், எழுதுகருவிகள், படிவங்கள் என்பன எடுத்து வரப்பட்டுள்ளன.

'மெயில் வான்' வந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனை நோக்கி வந்த 5 பஸ்கள் வழிமறிப்பு!

கொழும்பு, ஜூலை 18

கொழும்பில் இருந்து கல்முனை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஐந்து பஸ்கள் பிபிலை- மிளியங்கொட பாதையில் வழிமறிக்கப்பட்டு பயணிகளிடம் இருந்து ரொக்கப்பணம், விலையுயர்ந்த பொருள்கள் கொள்ளையிடப் பட்டன. நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

6 லட்சம் ரூபா பணமும், நகைகளும் கொள்ளையடிக்கப் பட்டதாக மொனராகல பொலீஸார் தெரிவித்தனர்.

## வவுனியா செல்லவிருந்த பெண் கொழும்பில் கைது

கொழும்பு, ஜூலை 18

கொழும்பில் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொண்டு வவுனியாவுக்கு தப்பிச் செல்லமுயன்ற 'சுக்கி' என்ற பெயருடைய பெண் ஒருவரை பம்பலப்பிட்டிப் பொலீஸார் கடந்த திங்கள் கைது செய்தனர்.

இவர் தான் ஓர் ஆசிரியை என்று தெரிவித்ததாக பொலீஸார் தெரிவித்தனர்.

## வாகன வரிப்பத்திரம் வழங்குவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 18

மோட்டார் வாகனங்களுக்கான 1996ஆம் ஆண்டுக்கான வரிப்பத்திரத்தை எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் யாழ். செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(8ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவத்தை விட்டுச்சென்றோரில்

## 3 ஆயிரம் சிப்பாய்கள் திரும்பி வந்துவிட்டனராம்

### சரத்முனசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 18

இராணுவத்தை விட்டுச் சென்ற சிப்பாய்களுக்கு மன்னிப்பு வழங்கும் திட்டம் நல்ல பலனை அளித்துள்ளது என்றும் இப்படி விட்டுச் சென்றவர்களில் 3 ஆயிரம் பேர் திரும்பி வந்துவிட்டனர் என்றும் இராணுவப் பேச்சாளர் சரத்முனசிங்க தெரிவித்தார்.

கடந்த தசாப்த ஆரம்பம் முதல் சுமார் 20 ஆயிரம் பேர் இராணுவத்தை விட்டுச் சென்றார்கள். முழு இராணுவத்துடன் ஒப்பிடுகையில் இது ஒரு சிறு எண்ணிக்கை ஆகும்.

இராணுவத்தை விட்டுச் சென்றோர் திரும்பி வருவதற்கு இம்மாதம் 31 ஆம் திகதிவரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கால எல்லை இனி நீடிக்கப்பட மாட்டாது.

அதன் பின்னர் அவர்களைக் கைது செய்வதற்கு விசேட திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும்.

இப்படி பிரிகேடியர் முனசிங்க மேலும் கூறினார்.

(இ-4)

### பொலன்னறுவை தாக்குதலில்

## 3 இராணுவச் சிப்பாய்கள் 3 ஊர்காவலர்கள் பலி

கொழும்பு, ஜூலை 18

பொலன்னறுவைத் தாக்குதலில் 3 ராணுவச் சிப்பாய்களும் 3 ஊர்காவலர்களும்கொல்லப்பட்டனர் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

நேற்று முன்தினம் காலை 6 30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இராணுவத்தினரும், ஊர் காவல் படையினரும் சேர்ந்து பொலன்னறுவை மாவட்டம் ஒலுவியாங்குளம் பகுதியில் ரோந்து வந்தபோது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

படையினரிடம் இருந்து ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்[illegible] வெரித்தாஸ் [illegible]

(இ-3)

### வடக்கு - கிழக்கு

## இணைப்பு இடம்பெற முடியாது என ரணிலிடம் சந்திரிகா நேரில் கூறினாராம்

கொழும்பு, ஜூலை 18

''வடக்கு - கிழக்கு இணைப்பு இடம்பெற முடியாது.

-இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தம்மிடம் தெரிவித்ததாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தகவல் வெளியிட்டிருக்கிறார்.

''த சண்டே லீடர்'' பத்திரிகையில் அதன் அரசியல் துறை கட்டுரையாளர் ''சுரநிமல'' இந்த விடயத்தைப் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

கடந்த எட்டாம் திகதி நடைபெற்ற ஐ. தே. கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் ரணில் மேற்படி விடயம் குறித்த தகவல்களை வெளியிட்டார்.

சில காலத்துக்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகாவுடன் தாம் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை வெளியிடுவதற்கு இனி மேலும் தாம் பின்னிற்கப் போவதில்லை என்று அங்கு ரணில் கூறினார்.

பிரிக்கமுடியாத ஸ்ரீலங்காவுக்குள் 13 ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று, பரந்த அதிகாரப் பரவலாக்

(8ஆம் பக்கம் பார்க்க)

# கறுப்புப் பூனை பாதுகாப்பு ஜெயலலிதாவுக்கு வாபஸ்!

அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் முன்னாள் தமிழக முதல்வருமான ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்டு வந்த கறுப்புப் பூனைப் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டிருக்கின்றது.

[illegible] வந்த தேசிய பாதுகாப்புப் படையினரின் பந்தோபஸ்து வாபஸ் பெறப்பட்டிருப்பதை ஜெயலலிதா ஆட்சேபித்திருக்கின்றார்.

பாதுகாப்பு விடயத்தில் தம்மை 'இஸட்' பிரிவில் மத்திய அரசு வைத்துக் கருதுவதால் தமக்கு மீண்டும் மத்திய படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு விடயத்தில் தாம் முதல்வராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் நிலைமை ஒன்றுதான்என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் குடியரசுத்தலைவர், பிரதமர், உள்துறை அமைச்சர் ஆகியோருக்கு கடிதங்கள் எழுதியுள்ளார்.

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் புனரமைப்பு வேலைகளுக்கு

# வடபகுதி மக்கள் ஒத்துழைப்பதில்லையாம்!

## அமைச்சர் திஸநாயக்க தகவல்

கொழும்பு ஜூலை 18

''யாழ்ப்பாணக் குடா நாட்டில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கு அங்கு வாழும் பொது மக்களின் ஒத்துழைப்பைப் பெற முடியாத நிலை இருப்பதானலேயே ''சமுர்த்தி சமாதானப் படை'' என்ற பெயரில் சுமார் 10 ஆயிரம் பேர் கொண்ட படையணியை திரட்டி அங்கு அனுப்ப அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது''

இளைஞர் விவகார கிராம அபிவிருத்தி, விளையாட்டுத் துறை அமைச்சர் எஸ். பீ. திஸநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உத்தேச ''சமுர்த்தி சமாதானப் படை'' தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் இருந்து கிளம்பி வரும் எதிர்ப்புகள் தொடர்பாக அமைச்சரிடம் கருத்துக் கேட்ட போதே அவர் இவ்வாறு சொன்னார்.

சமுர்த்தி சமாதானப்படையினை திரட்டும் அரசினது திட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும். அதை நாம் கைவிடப் போவதில்லை.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக குடா நாட்டில் உள்ள மக்கள் அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை; அவற்றினில் பங்குகொள்வதும் இல்லை — என்று அவர் கூறினார்.

அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த சாதாரண தொழிலாளர்களைத் தேடிக் கண்டுபிடிப்பது பெரும் சிரமமாக உள்ளது.

தமிழ்க் குழுக்களில் உள்ள ஆயுதப் பயிற்சி பெற்றவர்களை புனரமைப்பு நடவடிக்கைகளில் பயன்படுத்தினால் அது மீண்டும் உட்பகுதிக் குழப்பங்கள் உண்டாக வழி வகுக்கும். ஆனால் தமிழ்க் குழுக்கள் பொதுமக்கள் மத்தியில் இருந்து இளைஞர்களைத் தெரிவுசெய்து எமக்குச் சிபார்சு செய்தால், அவர்களைச் சமுர்த்தி சமாதானப் படையில் சேர்த்துக்கொள்வோம் — என்றும் அமைச்சர் தெரிவித்தார். (உ-3)

பயிலுநர், உதவி ஆசிரியர்:

## தொலைக் கல்விப் பயிற்சி பரீட்சை முடிவு 2 ஆம் திகதி

கொழும்பு, ஜூலை 18

பயிலுநர், உதவி ஆசிரியர்களுக்கான தொலைக் கல்விப் பயிற்சி நெறி இறுதிப்பரீட்சை முடிவுகள் அடுத்த மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் வெளிவரவிருக்கிறது.

இந்தப் பரீட்சை பரீட்சைத் திணைக்களத்தால் கடந்த ஆண்டு நடத்தப்பட்டது.

எனினும் இதுவரை பரீட்சை முடிவுகள் வெளியிடப்படாமல் இருந்தது.

வடக்கு - கிழக்கு பயிற்சி நிலையங்களில் மேற்கொண்ட மதிப்பீட்டு நடவடிக்கையின் போது பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தாமதமே பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்படக் காரணம் எனப் பரீட்சை ஆணையாளர் நாயகம் காமினி குணரத்தின தெரிவித்தார்.

அதே வேளை — இந்தப் பரீட்சையில் சித்தி அடையத் தவறும் மற்றும் தற்போதைய பயிற்சியில் பங்குபற்றாத பயிலுநர்களுக்கான பரீட்சை செப்ரெம்பர் இறுதிப் பகுதியிலும் ஒக்ரோபர் ஆரம்பத்திலும் நடைபெறும்.

இப் பரீட்சையில் சித்தி அடைவோர் அவர்களின் மூன்று வருட சேவைக் காலம் பூர்த்தி அடையும் தினத்தில் இருந்து ஆசிரியர் சேவைக்கு உட்படுத்தப்படுவார்கள்.


### தவறிவிட்டன

26-6-96 அன்று திருகோணமலையில் இருந்து வந்த நரோமா கப்பலில் பயணம் செய்து நயினா தீவு வந்த போது உடுப்புப் பார்சல் ஒன்றும் உணவுப்பொருள்கள் அடங்கிய கார்ட் போட் பார்சல் ஒன்றும் ஏராளமான ஆவணங்களும் தவறிவிட்டன. கண்டெடுத்தலர்கள் தயவு செய்து கீழ்க் கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்

Dr. சிவா. வேலாயுதம்
3ம். வட்டாரம்
நயினாதீவு. (41845)


## இயங்காத தபால் பெட்டிகள்

உரும்பராய், ஜூலை 18

கடிதங்களைத் தபாலில் சேர்ப்பதற்கு தபாலகங்களை நாடிச் செல்லவேண்டிய நிலையில் பொதுமக்கள் இன்று இருந்துவருகின்றனர்

வீதி ஓரங்களில் இருந்த தபால் பெட்டிகள் எதுவுமே இன்று அந்தந்த இடங்களில் இல்லை.

உரும்பராய் தபாலகத்தின் முன்னால் உள்ள தபால் பெட்டி உருப்படியாகத் தோற்றமளிக்கிறது எனினும் திறக்கக்கூடிய நிலையில் அது இல்லை.

அதன் வெளிப்புறத்தில் ''இப்பெட்டியினுள் கடிதங்களைப் போடவேண்டாம்'' என்றவாசகம் தொங்குகிறது

கடிதங்களை நேரில் தம்மிடம் கையளிக்கும்படி தபால் நிலைய அதிகாரிகள் கூறுகின்றனர். (இ-154)

## சக சிப்பாய்கள் நால்வரை சுட்டுக் கொன்ற சிப்பாய்!

வடபகுதியில் பணியாற்றும் காலாட் படையணியைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் தன்னுடன் பணியாற்றும் சக சிப்பாய்கள் நால்வரைத் திடீரெனச் சுட்டுக் கொன்றார் என கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிப்பதாக வெரித்தாஸ் சிங்கள சேவை தெரிவித்தது.

கொழும்பு மனநோய் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று யாழ்ப்பாணத்திற்குப் பணிக்கு அனுப்பப்பட்ட இச் சிப்பாய் எந்தவித காரணமுமின்றி கடந்த ஞாயிறு இரவு திடீரென துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தார் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தாராம். இச்சம்பவத்தில் 4 சிப்பாய்கள் கொல்லப்பட்டதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார். கைது செய்யப்பட்ட இந்தச் சிப்பாய் பின்னர் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் மாம்பழம் சந்திப் பகுதியில் இடம் பெற்றதாக மற்றொரு செய்தி தெரிவித்தது

## மலசல கூடத்தில் தமிழ் யுவதியின் சடலம்

வத்தளையில் அபிரிவத்தை வீதியில் அமைந்துள்ள ஒரு வீட்டின் மலசல கூடத்தில் தமிழ் யுவதி ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டில் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் வசித்து வந்தனர் எனவும் ·

தனியார் நிறுவனமொன்றில் பணியாற்றிவந்த ரங்கலையைச் சேர்ந்த விஜயலட்சுமி என்பவரின் சடலமே அந்த வீட்டின் மலசல கூடத்தில் கண்டெடுக்கப்பட்டது எனவும் ''தினமின'' பத்திரிகை தெரிவிக்கிறது (இ-10)


NEW SCIENCE ACADEMY
&
NEW SCIENCE HALL
KANNATHIDDY, JAFFNA.

98 A/L

கணித, விஞ்ஞானப் பிரிவு

★ எமது வழமையான ஆசிரியர் குழுவுடன் இணைந்த ஆசிரியர்களும் ★

ஆரம்பம்:- 21-07-96 SAT. 8·00 A. M.

(சி/2645)


## பாவனைக்கு உதவாத அரிசியை அழித்துவிட அமைச்சர் உத்தரவு

கொழும்பு, ஜூலை 18

பாவனைக்கு உதவாத ஒரு தொகை அரிசி மூடைகளை அழித்துவிடுமாறு உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்தினா உத்தரவிட்டுள்ளார்.

உணவு ஆணையாளரையும் உள்நாட்டு வர்த்தக ஆணையாளரையுமே அமைச்சர் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

உணவுத் திணைக்களத்துடன் பதிவு செய்துகொண்ட வர்த்தகர்கள் இந்த அரிசியை இறக்குமதி செய்திருந்தனர் எனக் கூறப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட வர்த்தகர்கள் இந்த அரிசியை இறக்குமதி செய்திருந்தால் உணவு ஆணையாளரின் சோதனைக்கு அரிசி உட்பட்டிருக்க வேண்டும் என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன

பாவனைக்கு உதவாத இந்த அரிசியை வர்த்தகர்கள் இறக்குமதி செய்திருந்தால் நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் கேட்டுள்ளார். (இ-3)

## வடபகுதிப் பெண் ஒருவரை மானபங்கப்படுத்தினராம்

### கடற்படை ஊழியர்கள் கைது

கொழும்பு, ஜூலை 18

மருதானைப் பொலீஸ் பிரிவில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் தங்கியிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருவரை மானபங்கப் படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இரண்டு கடற்படை ஊழியர்கள் நேற்று முன்தினம் மாளிகாவத்தை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

விளக்க மறியலில் வைக்கப்பட்ட இந்த இரு கடற்படை ஊழியர்களும் ரன்சல கடற்படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இந்த மானபங்கச் சம்பவம் இம் மாதம் 4 ஆம் திகதி இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)




மீண்டும் நெல்லியடியில் இயங்குகின்றது!!



செவ்வாய், வியாழன், சனி
காலை 8.30 தொடக்கம் பகல் 12.30 வரை

யாழ்வீதி. நெல்லியடி.

(மகாத்மா தியேட்டர் அருகாமை)

சிறந்த முறையில் பல் கட்டுவதற்கும் மூக்குக் கண்ணாடிகளைப் பெறுவதற்கும் இன்றே நாடுங்கள்:

லாவண்யா
பல் மூக்குக் கண்ணாடி அகம்

நெல்லியடி, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

(சி-2643)


## கரவெட்டிப் பகுதியில் மாடுகளுக்கு நோய்

வடமராட்சி, ஜூலை 18

கரவெட்டிப் பகுதியில் மாடுகளுக்கு கருங்கால் நோய் ஏற்பட்டுள்ளது.

மாடுகளின் கால்களைப் பாதிக்கும் இந்த நோயை கட்டுப்படுத்த புலோலி கால்நடை வைத்திய அலுவலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக யார்க்கரை என்னுமிடத்தில் இந்தநோய் அதிகமாகக் காணப்படுகிறது (இ-137)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வருமான வரித் துறையின் கிடுக்கிபிடியில் ஜெயலலிதா!

## பல கோடி ரூபா பணத்துடன் வங்கிக் கணக்குகள் மூடப்படும்?

சென்னை, ஜூலை 18
கோடி, கோடியாக வருமானவரி ஏய்ப்புச்செய்துள்ளதாகக்கூறப்படும் ஜெயலலிதாவின் வங்கிக் கணக்குகளை முடக்குவது குறித்து வருமானவரித்துறை அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருவதாகக் கூறப்படுகின்றது.

தனது வருமானத்துக்கு மீறி அதிகமாக சொத்து சேர்த்ததாக ஜெயலலிதாவுக்கு வருமான வரித்துறையினர் நோட்டீஸ் அனுப்பியுள்ளனர். இதற்கு ஜெயலலிதா அளித்த பதில்மீது விசாரணை நடந்து வருகிறது.

ஜெயலலிதா சேர்த்த சொத்துக்கள்' வளர்ப்பு மகன் திருமணத்தை ஆடம்பரமாக நடத்தியமை உட்பட பல பிரச்சினைகளை வருமான வரித்துறையினர் விசாரித்து வருகின்றனர்.

ஜெயலலிதா மட்டுமல்லாமல் அவரது உயிர்த் தோழி. உடன்பிறவா சகோதரி சசிகலா அவரது அக்கா மகன்கள் சுதாகரன், பாஸ்கரன், தினகரன், சசிகலாவின் கணவர் நடராஜன், மற்றும் அவர்களது ஏனைய உறவினர்கள் போன்றோர் வாங்கிக் குவித்துள்ள சொத்துக்கள், அதற்கு எப்படி பணம் கிடைத்தது என எல்லாவற்றையும் வருமான வரித்துறை விசாரிக்க உள்ளது.

கோத்த கிரியில் ஏழு கோடி 60 லட்சம் ரூபாவுக்கு சசிகலா வாங்கியுள்ள கோடநாடு எஸ்டேட்டும் இதில் அடங்கும்.

### வருமான வரி கணக்கு காட்டவில்லை

90, 91, 62 ஆம் ஆண்டுகளுக்கான தன்னுடைய வருமான வரிக் கணக்கைச் சமர்ப்பித்துள்ள ஜெயலலிதா 93, 94, 95 ஆம் ஆண்டுகளுக்கான வருமான வரிக்கணக்கை சமர்ப்பிக்க வில்லை; இதற்கான விவரங்களை உரிய படிவத்தில் எழுதி வெளிப்படுத்தத் தவறியதால் அவர் குற்றமிழைத்தவராகின்றார் எனக் கூறப்பட்டது.

1990 இல் தமக்கு 1 கோடி 80 லட்சம் ரூபா வருமானம் எனக் காட்டியுள்ள ஜெயலலிதா 91 இல் 2 கோடி 80லட்சம் ரூபாயும் 92 இல் 5 கோடி 82லட்சமும் வருமானம் எனப் பிரகடனப்படுத்தியிருக்கின்றார்.

### இவ்வளவும் பரிசுகளாம்

முதலமைச்சராக இல்லாமல் வெறும் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது 1990 இல் ஒரு கோடி 26 லட்சம் ரூபா மதிப்புக்கும் 1991 இல் 77 லட்சத்து 93 ஆயிரம் ரூபா மதிப்புக்கும் தமக்கு பரிசுப் பொருள்கள் கிடைத்ததாகத் தெரிவித்துள்ள ஜெயலலிதா 1992 இல் தாம் முதலமைச்சரானதும் 2 கோடியே பத்து லட்சம் ரூபா மதிப்புக்கு தமக்குப் பரிசுப் பொருள்கள் கிடைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

தான் முதலமைச்சராக இருந்த போது கிடைத்த பரிசுப் பொருள்கள் வரிமதிப்புக்கு அப்பாற்பட்டவை என்று அவர் கூறியுள்ளார்.

ஆனால் பொது வாழ்க்கையில் இருந்ததால் வரிவிதிப்புக்கு அப்பாற்பட்டவராக தன்னைக் கருதி ஜெயலலிதா கொடுத்த விளக்கத்தைத் தாங்கள் நிராகரித்து விட்டதாக வருமான வரித்துறையினர் தெரிவித்தனர்.

ஹைதராபாத்தில் உள்ள ஜெயலலிதாவின் திராட்சைத் தோட்டம், 1992 இல் ஜெயலலிதாவும், சசிகலாவும் சம்பாதித்த ஒரு கோடி 80 லட்சம் ரூபா அந்நிய செலாவணி, பல்வேறு வங்கிக்கணக்குகளில் ஜெயலலிதா வைத்துள்ள பணம் ஆகியவை குறித்தும் விசாரணை நடக்கின்றது.

### வங்கிகளில் வைப்பிட்ட பணம்

ஜெயலலிதா 91 இல் மட்டும் சென்னை, மைலாப்பூர், கனரா வங்கி சேமிப்புத்திட்டத்தின் கீழ் ரூ 3 கோடியே 12 லட்சத்து 21 ஆயிரத்து 350 வைப்பில் சேமித்து இருந்தார்.

இதில் 1 கோடியே 94 லட்சத்து 60 ஆயிரத்து 12 ரூபாய் ஒரே நாளிலே இதே வங்கியில் வைப்பிடப்பட்டு உள்ளது. இது தன்னுடைய பிறந்த நாள் பரிசாக வந்தது என்று அவர் கூறியிருந்தார்.

92 இலும் இதே வங்கியில் ஜெயலலிதா பெயரில் நடப்பு கணக்கில் ரூபா ஒரு கோடி 20 லட்சம் போடப்பட்டது. சேமிப்பு திட்டத்தில் மட்டும் 2 கோடியே 28 லட்சத்து 90 ஆயிரத்து 196 வைப்பிடப்பட்டது.

அத்துடன் 93, 94, 95ஆகிய வருடங்களிலும் பெருந்தொகைப் பணம் இந்த வங்கியில் போடப்பட்டது.

ஆகமொத்தம் ரூ 11 கோடி இவ்வாறு வைப்பிடப்பட்டுள்ளது.

இந்த பணம் எப்படி வந்தது என வருமானவரித்துறையினர் விசாரித்து வருகின்றனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஜெயலலிதாவின் காணி நீதிமன்றால் சுவீகரிப்பு

சென்னை, ஜலை 18
தமிழ்நாட்டில் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, அவரது நெருங்கிய தோழி திருமதி சசிகலா ஆகியோர் ''டான்ஸி'' நிறுவனத்திடம் இருந்து வாங்கிய சர்ச்சைக்குரிய நிலத்தை நீதிமன்றத்தைப் பொறுப்பேற்கும்படி சென்னை பெருநகர நீதிமன்றம் ஒன்று நேற்று முன்தினம் இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.

இந்த நில வழக்கை விசாரித்து வரும் மாநில குற்றத் தடுப்புப் பிரிவு தாக்கல் செய்த முறைப்பாட்டு மனுவை அடுத்து சிறு குற்றங்களை விசாரிக்கும் நீதிமன்ற நீதிபதி டேவிட் கிறிஸ்ரியன் தனது இடைக்கால உத்தரவில் இந்த சுவீகரிப்பு ஆணையை பிறப்பித்தார்.

ஜெயலலிதாவுக்கும், சசிகலாவுக்கும் அடுத்த மாதம் 8 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நோட்டீஸ் அனுப்புமாறு நீதிபதி உத்தரவிட்டார்

1992 ஆம் ஆண்டு ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது அவரையும் சசிகலாவையும் பங்குதாரராகக் கொண்ட ஜெயா பப்ளிக்கேஷன்ஸ் நிறுவனம் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்துக்கு (''டான்ஸி'') சொந்தமான இக்காணியை மிகக் குறைந்த விலைக்கு — சட்ட முறைகளுக்கு முரணான வகையில் — கொள்வனவு செய்ததாகக் கூறப்படுகின்றது

பல கோடி ரூபா 'பெறுமதியான இக்காணி சில லட்சம் ரூபாவுக்கு ஜெயா பப்ளிக்கேஷனுக்கு விற்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

# 'ஜெ'க்கு சட்ட ஆலோசனை ஜெத்மலானி வழங்குகிறார்

சென்னை, ஜூலை. 18
வருமான வரி ஏய்ப்பு மற்றும் ஊழல் வழக்குகளை எதிர்நோக்கியிருக்கும் தமிழக முன்னாள் முதலமைச்சர் அவற்றைச் சமாளிப்பதற்காக பிரபல சட்டத்தரணி ராம் ஜெத்மலானியிடம் சட்ட ஆலோசனை பெற்று வருகின்றார்.

தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் இருந்து விடுபடுவது குறித்து ஆலோசனை கேட்பதற்காக பிரபல சட்டத்தரணியும், முன்னாள் சட்ட அமைச்சருமான ராம் ஜெத்மலானியை ஜெயலலிதா சென்னைக்கு அழைத்தார். அவரும் சென்னைக்கு வந்து ஜெயலலிதாவை ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் வீட்டில் சென்று சந்தித்துப் பேசினார்.

பல்வேறு கோணங்களிலும் சட்ட அம்சங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்த ஜெத்மலானி, ''எதையும் சமாளித்து விடலாம். அதிருப்தியோ, அதைரியமோ அடைய வேண்டியதில்லை.''

--என்று ஜெயலலிதாவுக்கு ஆலோசனை கூறினாராம்.

ஜெயலலிதாவுக்கு சட்ட உதவி வழங்குவதற்காக மீண்டும் மீண்டும் ராம் ஜெத்மலானி சென்னை வருவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றதாம். (உ)

# பாதுகாப்பை விலக்கியதற்கு சேடப்பட்டி கடும் எதிர்ப்பு

சென்னை, ஜூலை 18
தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்டுவரும் தேசிய பாதுகாப்பை விலக்கிக் கொள்ள மத்திய அரசு முடிவு செய்திருப்பதாக கூறப்படுவது குறித்து அ.தி.மு.க கண்டனம் தெரிவித்துள்ளது.

கட்சியின் புதியபொருளாளர் சேடப்பட்டி முத்தையா சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், இந்திய மண்ணில் அந்நிய நாட்டுத் தீவிரவாதிகளின் நடவடிக்கையை தடுக்க எடுத்த முயற்சியால் விடுதலைப் புலிகளுக்கு ஜெயலலிதா மீது ஆத்திரம் ஏற்பட்டுள்ளது என்றும்—

ஜெயலலிதாவுக்கு இந்த ஆபத்து இருப்பதை மத்திய அரசும் அறியும் என்றும்— தெரிவித்துள்ளார். (உ-3)

# 'ஜெயலலிதா அண்ட் கோ'வை வலையில் சிக்க வைத்த அதிகாரிகள் திடீர் மாற்றம்

ஒரு வருட காலம் பகீரதப் பிரயத்தனம் செய்து சசிகலா மற்றும் உறவினர்களை வளைத்துப் பிடித்து, ஜெயலலிதாவைச் சிக்கவைக்க வியூகங்களை அமைத்த அமுலாக்கல் பிரிவின் ஒன்பது முக்கிய அதிகாரிகளுக்கு திடீரென்று இடமாற்றல் உத்தரவு வந்திருப்பது தமிழக அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஜெயலலிதா சசிகலா கூட்டணியின் விதியையே மாற்றி எழுத வைத்த அதிகாரி பி. வி. பாலசுப்பிரமணியம் ஹைதராபாத்துக்கு தூக்கி வீசப்பட்டுள்ளார். அமுலாக்கல் பிரிவு அதிகாரி கிஸ்தூர் சந்த் தலைமையிலான குழுவுக்கும் இடமாற்ற உத்தரவு வந்துள்ளது.

சசிகலாவின் பிணைமனு நீதிமன்றத்தில் இருக்கும் இவ்வேளையில்—

அறுபத்தியைந்து கோடி ரூபா அந்நிய செலாவணி மோசடி வழக்கில் தினகரனுக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு வர விருக்கும் இச்சந்தர்ப்பத்தில் —

இந்த இடமாற்றங்கள் இவ்விரு வழக்குகளையும் கடுமையாகப் பாதிக்கும் எனக் கருதப்படுகின்றது.

இந்த இடமாற்றங்களுக்கு அரசியல் பின்னணி இருக்கும் என்று சந்தேகிக்கும் அமுலாக்கல் பிரிவு அதிகாரிகள் கடந்த மாதச் சம்பளத்தை ஒட்டு மொத்தமாக வாங்க மறுத்ததன் மூலம் தமது எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்.

''சசிகலா அண்ட் ஜெயலலிதா'' கம்பனியின் வழக்குகளைத் தினசரி உன்னிப்பாகக் கவனித்து வரும் மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் இந்த இடமாற்றல் உத்தரவுகளை ரத்துச் செய்ய உதவுவார் என அதிகாரிகள் நம்புகின்றார்கள்.

இல்லையேல் ஜெயலலிதா குழு சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிடவும் வாய்ப்புண்டு எனக் கருதப்படுகின்றது.

# அ.தி.மு.கவிலிருந்து ஜெயலலிதாவை நீக்குவதற்கு கண்ணப்பன் குழு முயற்சி

## கட்சி இரண்டாக உடைந்தாலும் ஆச்சரியமில்லை

சென்னை, ஜூலை 18
தமிழக சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கு பெரும் தோல்வி ஏற்பட்டிருப்பதை அடுத்து, கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து ஜெயலலிதாவை அகற்றுவதற்கு கட்சிக்குள் பலமுள்ள ஓரணி முயன்று வருவதாகக் கூறப்படுகின்றது.

தமது தோழியான சசிகலாவை விட்டு விலக மறுக்கும் ஜெயலலிதாவை கட்சியை விட்டே நீக்கும் முயற்சிக்கு அ. தி. மு. கவின் முன்னாள் அமைச்சரான கண்ணப்பன் தலைமை தாங்கி ஆதரவு திரட்டி வருகின்றார்.

முன்னாள் அமைச்சரும், அ. தி. மு. கவின் முக்கிய பிரமுகர்களுள் ஒருவருமான எஸ். டி. சோமசுந்தரம் (எஸ். டி. எஸ்.) தலைமையில் அ. தி. க. கவை உருவாக்குவதே கண்ணப்பன் குழுவினரின் திட்டமாகும்.

தற்போதைய நிலைமைத் தொடர்ந்தால் அ.தி. மு.க. உடைவது உறுதி என்று தமிழகப் பத்திரிகைகள் ஆருடம் கூறுகின்றன.

தேர்தல் படுதோல்விக்குப் பிறகு சசிகலா அணிக்கு எதிராக அ. தி. மு. கவுக்குள் எதிர்ப்புக் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. தோல்விக்குக் காரணமே சசிகலா தான். அவரது அக்காள் மகன் திருமணத்தை மிகவும் ஆடம்பரமாக நடத்தி கட்சிக்குக் கெட்ட பெயரை உண்டாக்கி விட்டார். எனவே சசிகலாவை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என்று எதிர்ப்புக் குரல்கள் வலுத்தன. ஆனால் ஜெயலலிதாவோ இதை ஏற்க மறுத்து வருகிறார்.

இந்நிலையில பசும் பொன் மாவட்ட அ. தி. மு. க. செயலாளரும், அ.தி.மு.க. பொருளாளராகவும் இருந்த கண்ணப்பன் சசிகலா எதிர்ப்பு அணியை உருவாக்கி வருகிறார்.

சொந்த ஊரில் ரகசியக் கூட்டம் நடத்திய கண்ணப்பன் எஸ். டி. எஸ்க்கு ஆதரவாகப் பேசினார். இந்த விவரம் ஜெயலலிதாவுக்கு எட்டியதும் கண்ணப்பன் கட்சியின் பொருளாளர் பதவியில் இருந்தும் பசும்பொன் மாவட்ட செயலாளர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டார்.

பதவிகள் பிடுங்கப்பட்டதையடுத்து சென்னையில் உள்ள தனது வீட்டில் கண்ணப்பன் தனது ஆதரவாளர்களுடன் ரகசிய ஆலோசனை நடத்தினார். எட்டு முன்னாள் அமைச்சர்களும், கண்ணப்பன் தீவிர ஆதரவாளர்களும் இதில் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பல பரபரப்பான முடிவுகள் எடுக்கப்பட்டன. இதன்படி பொதுக் குழுவைக் கூட்ட ஜெயலலிதாவை வற்புறுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஒன்றில் சசிகலாவை போயஸ் தோட்டத்திலிருந்து ஜெயலலிதா வெளியேற்ற வேண்டும்; இல்லாவிட்டால் ஜெயலலிதாவை கட்சியிலிருந்து நீக்க வேண்டும், —என்று பல தலைவர்கள் வற்புறுத்தி பேசினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூலின்ஸ் RUHLINS

எமது சேவைகளை வழமைபோலவழங்கி வருகிறோம் என்பதை வாடிக்கையாளர்கட்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இல. 6, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

(41841)



## கோப்பாய் கல்வி நிலையம்

மானிப்பாய் வீதி, **K.E.C** கோப்பாய்.

ஆண்டு 6 தொடக்கம் 11 வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

**A/L** 1998 கலை, வர்த்தக வகுப்புக்கள் 1.8.96 இல் ஆரம்பமாகின்றன.

இயக்குனர்

(4846)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. வரலாற்றில் / தமிழில் / இந்து நாகரீகத்தில் / அரசறிவியலில் / பொருளியலில் / வர்த்தகத்தில் / முகாமைத்துவ படிப்புகளில் / மெய்யியலில் / ஆங்கில மொழியில் / மொழியியலில் / கிறிஸ்தவ நாகரீகத்தில் / கல்வியில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 / விரிவுரையாளர் (தகுதிகாண்)
2. சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1 / சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11 / விரிவுரையாளர் (தகுதி காண்) –
   - அ) வாய்ப்பாட்டு (கர்நாடக சங்கீதம்) – இசைத்துறை
   - ஆ) பண்ணிசை (கர்நாடக சங்கீதம்) – இசைத்துறை
   - இ) வாத்தியங்கள் (கர்நாடக சங்கீதம்) - வீணா / மிருதங்கம் – இசைத்துறை
   - ஈ) பரதநாட்டியம் – நடனத்துறை
   - உ) வாய்ப்பாட்டு – நடனத்துறை
   - ஊ) வயலின் / மிருதங்கம் – நடனத்துறை
3. ஆங்கிலத்தில் போதனாசிரியர் தரம் 11
4. தற்காலிக விரிவுரையாளர்:
   - வியாபார நிருவாகம்
   - கிறிஸ்தவ நாகரீகம்
   - வர்த்தகம்
   - நாடகமும் அரங்குக் கலைகளும்
   - பொருளியல்
   - ஆங்கில இலக்கியம்
   - நுண்கலை
   - இந்து நாகரீகம்
   - மெய்யியல்
   - அரசறிவியல்
   - சமஸ்கிருதம்
   - கணிதமும் புள்ளி விபரவியலும்
   - ஆற்றுகைக்கலை – கர்நாடக சங்கீதம் / வாய்ப்பாட்டு
   - ஆற்றுகைக்கலை - கர்நாடக சங்கீதம்/பண்ணிசை
   - ஆற்றுகைக்கலை - கர்நாடக சங்கீதம் / வாத்தியங்கள் - வீணா/வயலின்/மிருதங்கம்
   - ஆற்றுகைக்கலை – (நடனம்) பரதநாட்டியம்
   - ஆற்றுகைக்கலை – நடனத்திற்கான வாய்ப்பாட்டு (பரதநாட்டியம்)
   - ஆற்றுகைக்கலை - நடனத்திற்கான மிருதங்கம் (பரதநாட்டியம்)
5. தற்காலிக கட்டுரை ஆசிரியர்:-
   - வரலாறு
   - புவியியல்
6. தற்காலிக போதனாசிரியர்:-
   - ஆங்கிலம் தரம் 11
   - பரதநாட்டியம்
   - மிருதங்கம்
   - கர்நாடக சங்கீதம் (வாய்ப்பாட்டு)
7. இடை வரவு விரிவுரையாளர்:–
   - வர்த்தகம் - வர்த்தக கைத்தொழிற்சட்டம்/தொழிற்சட்டம், கணக்காய்வு, வரிவிதிப்பு
   - வியாபார நிருவாகம் – சட்டச்சூழல், வங்கியியலும் நிதியியலும், கணிதமும் புள்ளிவிபரவியலும், பொதுத்துறைக்-கணக்கியல் கணனி
   - மெய்யியல் - பொது, சமூக உளவியல் – உயர் கணக்கியல்
   - அரசறிவியல் / கணிதமும் புள்ளிவிபரவியலும்.
   - பிரான்சிய மொழி
   - நாடகமும் அரங்குக்கலைகள் - அரங்கவரலாறு, தயாரிப்பு முறை, நடிப்புக்கொள்கை, இந்திய அரங்கு ஆகியன கற்பித்தற்கு
   - ஆங்கிலம் (இலக்கியம்)
   - கட்டிடக்கலை / சிற்பக்கலை / ஓவியம் தீட்டுதல்
   - கிறிஸ்தவ நாகரீகம் – பழைய ஏற்பாட்டியல், புதிய ஏற்பாட்டியல், இலங்கை திருச்சபை வரலாறு, கிறிஸ்தவ மெய்யியல், கிறிஸ்தவ வழிபாட்டியல்
8. இடை வரவுப் போதனாசிரியர்:-
   - கர்நாடக சங்கீதம் (வாய்ப்பாட்டு)
   - பண்ணிசை
   - வயலின்
   - வீணா
   - நடனம்

தயவுசெய்து குறித்துக் கொள்க.

கல்வியில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் I / சிரேட்ட விரிவுரையாளர் தரம் II / விரிவுரையாளர் (தகுதிகாண்) பதவிக்கு கல்வியில் பட்டப் பின் டிப்ளோமாவை கொண்டிருப்போருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

*சம்பள அளவுத்திட்டம்:*

சிரேட்ட விரிவுரையாளர் தரம் I
ரூபா 12,725 — 8x325 — 15,325/- மாதமொன்றிற்கு

சிரேட்ட விரிவுரையாளர் தரம் II
ரூபா 10,650 — 5x325 — 12,275/- மாதமொன்றிற்கு

விரிவுரையாளர் (தகுதிகாண்)
ரூபா 6,050 — 10x250 — 8,550/- மாதமொன்றிற்கு

ஆங்கிலத்தில் போதனாசிரியர் தரம் II
ரூபா 4,750 — 10x130 — 6,050/- மாதமொன்றிற்கு

தற்காலிக விரிவுரையாளர்
ரூபா 6,050/- (நிலையானது) மாதமொன்றிற்கு

தற்காலிக போதனாசிரியர் தரம் II (ஆங்கிலத்தில்)
ரூபா 4,750/- (நிலையானது) மாதமொன்றிற்கு

தற்காலிக கட்டுரை ஆசிரியர்
ரூபா 4,420/: (நிலையானது) மாதமொன்றிற்கு

தற்காலிக போதனாசிரியர் (பரதநாட்டியம் / மிருதங்கம் / கர்நாடக சங்கீதம் (வாய்ப்பாட்டு)
ரூபா 4,100/- (நிலையானது) மாதமொன்றிற்கு

இடை வரவு விரிவுரையாளர்
ரூபா 300/- மணிக்கு

இடை வரவு போதனாசிரியர்
ரூபா 150/- மணிக்கு

இத்துடன்:

(அ) 1996 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரை "நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும்" படியாக மேற்குறித்த மாத சம்பளத்தின் 25 சதவீதத்திற்கு சமமான தொகை வழங்கப்படும்.

(ஆ) எல்லா பட்டதாரிகளுக்கும் ஆண்டுக்கு ரூபா 10,000/- படியும் அத்துடன் அடிப்படைச் சம்பளத்தினதும், நிலுவையிலுள்ள பணியை நிறைவேற்றுவதற்கான ஆண்டுப்படியின் 10 வீதமும் ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப் பணமாகச் செலுத்தப்படும்.

1993 மே 12ஆம் திகதிய 9/93 பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்த படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு அவர் சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/-வை செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளை சிரேட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி:**

1. எல்லா / நிரந்தர பதவிகளுக்கும் — **1996-09-06**
2. தற்காலிக / இடைவரவு பதவிகளுக்கு — **1996-08-16**

தபால் மூலம் படிவங்களையும், விபரங்களையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் 23x10 ச. மீ. அளவுடைய, சுயமுக வரியிட்ட ரூபா 2/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
1996-07-16.

(சி-2640)

## சமய சந்நிதிகளில்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் ஆடிப்பூரத் திருவிழா எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு கடந்த வியாழக்கிழமை தொடக்கம் விசேட அபிஷேக பூசைகள் நடைபெற்று வருகின்றன.

★ ★ ★

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை கலட்டி எச்சாட்டி மகாமாரியம்பாள் ஆலயத் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகலில் நடைபெறும். சனிக்கிழமை ஆடிப்பூரத் திருவிழாவும், திங்களன்று விசேட குளிர்த்தியும் இடம்பெறும்.

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை ஏழு மணி தொடக்கம் இலட்சார்ச்சனை நடைபெறும்.

(அ-30)

★ ★ ★

சாவகச்சேரி வடக்கு பன்றிக்கேணி கந்தசாமி கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. உற்சவம் தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறும்.

## கறுப்பு ஜூலை தாக்குதல் நடத்த திட்டம்?

கறுப்பு ஜூலை தினத்தில் கொழும்பில் பேரழிவை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே வெள்ளவத்தையில் ஆயுதங்களும், வெடிமருந்துகளும் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

வெள்ளவத்தையில் ஆயுதங்களும் வெடி மருந்தும் கண்டுபிடிக்கப்பட்ட வீட்டில் ஒரு நில அறை கண்டுபிடிக்கப்பட்டிருந்ததாகவும்—

பொலீஸார் அதனை கண்டுபிடித்த போது அதற்குள் எதுவும் இருக்க வில்லை என்றும் —

நில அறைக்குள் இருந்த ஆயுதங்கள் வேறுஇடத்துக்கு கடத்தப்பட்டிருக்கலாம் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

வருமான...
((3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊழல் பட்டியல்

★ அரசு நிறுவனமான டான்கிக்குச் சொந்தமான — மிகப்பெறுமதி மிக்க — நிலங்களை ஜெயலலிதாவை பங்குதாரராகக் கொண்ட ஜெயா பப்ளிகேஷன் ஸுக்கு மிகக் குறைந்த விலையில் விற்றமை

★ நிலக்கரி இறக்குமதி தொடர்பான பேரத்தில் ஐம்பது கோடி ரூபா லஞ்சம் வாங்கியமை (இறக்குமதிக்கான ஒப்பந்தம் சசிகலாவுடைய அழகேந்திரன் பிரதர்ஸுக்கு வழங்கப்பட்டது.)

★ 65 கோடி ரூபாவை வெளிநாட்டில் தினகரன் சேர்த்து வைத்தது.

★ 1991 — 93 இல் கட்சிக்காரர்களிடம் இருந்து 410 கோடி ரூபாவை நன்கொடையாகப் பெற்றதாக ஜெயலலிதா கூறியதை வருமான வரித்துறை ஏற்கவில்லை.

★ 1991 — 95 இல் ஜெயா பப்பிளிகேஷன் நிறுவனத்துக்கு மர்மமான முறையில் வந்துசேர்ந்தது பத்துக்கோடி ரூபா. இது பெரும்பாலும் அ. தி. மு. க. கணக்கிலிருந்து வந்ததாகக் கூறப்படுகின்றது.

★ "ஜெ.ஜெ. டி. வி." விவகார ஊழல்கள்.

— இவ்வாறு ஜெயலலிதாவை விங்கக் காத்திருக்கும் ஊழல் குற்றச்சாட்டுப் பூதங்களைப் பட்டியலிட்டால் அது இன்னும் மிகமிக நீண்டுவிடும் என்பதுதான் இப்போதைய உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைக் காப்பாற்றுவதாயின் ஒற்றை ஆட்சியை மாற்ற வேண்டும்

## முஸ்லிம் காங்கிரஸ் அறிக்கை

ஒற்றையாட்சி அமைப்புத்தான் நாட்டில் பயங்கரவாதம் உருவாவதற்கு காரணமாயிருந்தது. இனியாவது இந்த நாடும், சமூகங்களும் காப்பாற்றப்பட வேண்டுமானால், ஒற்றையாட்சி அமைப்பு மாற்றப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

காங்கிரஸின் மூத்த துணைத்தலைவர் மருதூர் கனி விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒற்றையாட்சி அமைப்புக்குள் எத்தகைய அரசியல் யோசனைகளை நடைமுறைப்படுத்த நினைத்தாலும் அது வெற்றியளிக்கப் போவதில்லை. ஏனெனில் ஒற்றையாட்சி அமைப்பு இருக்கும் வரை பேரினவாதிகளின் கைகளும் ஓங்கியிருக்கவே செய்யும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளும் கட்சியாக இருந்தாலும் அந்தக் கட்சிகளில் இருக்கும் பேரினவாதிகள் சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளை தட்டிப்பறிப்பதிலும் அல்லது தட்டிவிடுவதிலும் ஒற்றுமையாகவே செயற்பட்டு வந்திருக்கின்றனர்.— என்று தெரிவித்துள்ளார். (உ-3)

# ராவ் பற்றிய கருத்துக்கு குப்தா வருத்தம் தெரிவிப்பு

இந்திய தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் பிரதமருமான நரசிம்மராவ் குறித்து தமிழகத்தில் வைத்துத் தாம் தெரிவித்த கருத்துகளுக்கு இந்திய உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா இந்திய நாடாளுமன்றத்தில் வருத்தம் தெரிவித்தார்.

இதனையடுத்து—

ஐக்கிய முன்னணி அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை வாபஸ்பெறும் தனது முயற்சியை காங்கிரஸ் கைவிட்டது என புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன. (உ-10)

# வடக்கு முஸ்லிம்களுக்கும் தாயகம்: அவர்களும் அங்கு வாழ உரித்துண்டு

## தமிழர்-முஸ்லிம் ஒன்றுகூடலில் பேராசிரியர் சிவத்தம்பி

கொழும்பு, ஜுலை. 18

''வடக்கு, முஸ்லிம்களினதும் தாயகம். அங்கு வாழ்வதற்கு முஸ்லிம்கள் உரித்துடையவர்கள். உண்மையில் அவர்கள் வெளியேற்றப்பட்டது ஓர் அருவருக்கத்தக்க செயலே.''

இப்படிக் கூறியுள்ளார் பேராசிரியர் கா. சிவத்தம்பி.

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு ஏற்பாடு செய்த யாழ். தமிழ்—முஸ்லிம் மக்களுக்கான ஒன்றுகூடலில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பின் தலைவர் கலாநிதி எஸ். எச். ஹிஸ்புல்லா தலைமையில் கடந்த சனிக்கிழமை அமைப்பின் தலைமையகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பேராசிரியர் சிவத்தம்பி மேலும் கூறியதாவது;

400 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே யாழ். முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்கும், இடையே நல்லுறவு இருந்து வந்திருக்கின்றது. அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. எனினும் துரதிருஷ்டவசமாக விடுபட்டுப்போன இந்த உறவை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாம் இப்போது முன்னெடுத்தல் வேண்டும். அதற்காக எம்மால் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் எவையோ அவற்றையெல்லாம் நாம் மேற்கொள்ள வேண்டும்— என்றார்.

கவிஞர் வ. ஐ. ச. ஜெயபாலன், யாழ். மாநகரசபை முன்னாள் உறுப்பினர் எம். சாகுல் ஹமீட், முன்னாள் யாழ். உதவி மேயர் எம். எம். ஸி. பஷீர், பேராசிரியர் சி. சிவசேகரம் ஆகியோரும் உரையாற்றினர்.

தமிழர்—முஸ்லிம் ஐக்கியத்துக்கான முயற்சியை முன்னெடுக்கும் வகையில் ஏற்பாட்டுக் குழு ஒன்றும் இக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, கவிஞர் வ. ஐ. ச. ஜெயபாலன், விரிவுரையாளர் க. சிதம்பரநாதன், வர்த்தகப் பிரமுகர் எஸ். தியாகராசா, கலாநிதி எஸ். எச். ஹிஸ்புல்லா, பேராசிரியர் சி. சிவசேகரம், மௌலவி பி. ஏ. எஸ். சுபையான், எம். எம். சி. பஷீர், கே. எம். எஸ். ஹமீட் ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர். (உ)

## வடமராட்சி அரச ஊழியர் மினிபஸ் சேவை

வடமராட்சி, ஜுலை 18

யாழ். நகரிலுள்ள அரச திணைக்களங்களில் பணியாற்றும் வடமராட்சியைச்சேர்ந்த அரச ஊழியர்களுக்கென விசேட மினிபஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து வேலை நாள்களில் தினமும் காலை 7 மணிக்கு யாழ்ப்பாணத்துக்கும், பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கும் இவ் விசேட மினிபஸ் சேவை நடைபெற்று வருகிறது.

அரச ஊழியர்களுக்கான விசேட மினிபஸ் சேவையில் ஒருவழிக்கட்டணமாக 10 ரூபா அறவிடப்படுகிறது. (இ-173)

# ராவ் மீதான உத்தரவை தள்ளுபடி செய்ய கோரி மனு

இந்திய முன்னாள் பிரதமர் நரசிம்மராவை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு புதுடில்லி தலைமைப் பெருநகர் மாஜிஸ்ரேட் கடந்த 9 ஆம் திகதி விடுத்த உத்தரவைத் தள்ளுபடி செய்ய வேண்டும் எனக்கோரி புதுடில்லி உயர் நீதிமன்றத்தில் நரசிம்மராவின் சார்பில் நேற்று முன்தினம் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

லகுபாய் பட்டேல் ஏமாற்றப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் வழக்கில் நரசிம்மராவை எதிர் வரும் 24 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டிருக்கின்றார்.

இந்த உத்தரவை தள்ளுபடி செய்யக்கோரியே உயர் நீதிமன்றில் நரசிம்மராவ் மனுச் செய்திருக்கிறார்.

இந்த மனுவை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம் எதிர் வரும் வெள்ளியன்று இம்மனு மீதான விசாரணைக்கு ஆஜராகுமாறு குற்றப் புலனாய்வுத் துறைக்கு நோட்டீஸ் அனுப்ப நேற்று உத்தரவு பிறப்பித்தார். (உ-3-10)

# நடராஜனை பிணையில் விட நீதிமன்று மீண்டும் மறுப்பு

சென்னை, ஜுலை 18

செய்தியாளர்களைத் தாக்கிய வழக்கில் எம். நடராஜனுக்கு பிணை வழங்க சென்னை உயர் நீதிமன்றம் மீண்டும் மறுத்து விட்டது.

நீதிபதி ஏ. எஸ். ஆனந்த், நீதிபதி கே.டி. தோமஸ் ஆகியோரைக் கொண்ட நீதிமன்றம் இத்தீர்ப்பை வழங்கியுள்ளது.

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியான சசிகலா விசாரணைக்காக அமுலாக்கல் பிரிவு அலுவலகத்துக்கு வந்த சமயம் அவருடன் கூட வந்த அவரது கணவரான நடராஜன் அங்கு கூடியிருந்த செய்தியாளர்களைத் தாக்கியதாகக் கூறப்படுகின்றது. (உ-3)

## தமிழக அரசு கோரிக்கை

சென்னை, ஜுலை 18

முன்னைய அ.தி.மு.க ஆட்சியின் போது இடம் பெற்ற ஊழல் சம்பந்தமான விவரங்களை மாநில புலனாய்வு மற்றும் லஞ்ச ஊழல் தடுப்பு பிரிவிடம் தெரிவித்து உதவுமாறு தமிழக அரசு மாநில மக்களைக் கேட்டுள்ளது. (உ-3)

# மேலும் வெடிப்பொருள்கள் வெள்ளவத்தையில் மீட்பாம்

கொழும்பு வெள்ளவத்தையில் மேலும் பெருமளவு வெடிப்பொருள்கள் ஹம்டன் லேன் இல்லத்தில் இருந்து கைப்பற்றப்பட்டிருப்பதாக இலங்கை வானொலி அறிவித்தது.

கடந்த வாரம் 100 கிலோ ரி. என். ரி வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்ட ஹம்டன் லேன் இராசவல்லி ஒழுங்கை வீட்டில் இருந்தே மேலும் வெடிப்பொருள்கள் கைப்பற்றப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

கைக்குண்டுகள் வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட எட்டு வாளிகளும் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டதாக கொழும்பு பிராந்திய பொலீஸ் பிரதி அதிபர் திஸநாயக்க தெரிவித்தார்.

விசாரணைகள் தொடர்கின்றன. (உ-3)

## பல்கலைக்கழக மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜுலை 18

யாழ். பல்கலைக்கழகத்தில் 93/94ஆம் கல்வியாண்டில் முதலாம் வருடத்தில் பயிலும் கலைப்பீட மாணவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று நாளை முற்பகல் 11 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் என மாணவப் பிரதிநிதிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

# ஜெயலலிதா அணியில் இந்திராகுமாரியும் கைது!

சென்னை, ஜுலை 18

தமிழ்நாடு சமூகநலத்துறை முன்னாள் அமைச்சர் திருமதி இந்திராகுமாரியும், அவரது உதவியாளர் வெங்கட கிருஷ்ணனும் நேற்று கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இம்மாதம் 31 ஆம் திகதி வரை காவலில் வைக்கப்பட்டிருப்பார்கள்.

இவர்களில் திருமதி இந்திராகுமாரி வேலூர் மத்திய சிறையிலும்—

திரு. வெங்கட கிருஷ்ணன் சென்னை மத்திய சிறையிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

திருமதி இந்திராகுமாரியின் பிணைக் கோரிக்கை மனுவும், சிறையில் தமக்கு முதல் வகுப்பு கோரும் மனுவும் நேற்று விசாரிக்கப்படவிருந்தன.

முன்னைய அ. தி. மு. க. ஆட்சியின் போது இலவச வேட்டி, சேலை, பள்ளி சீருடை வழங்கியதில் 16 கோடி ரூபாவுக்கு மோசடி செய்திருப்பதாக குற்றம் சாட்டி மாநில புலனாய்வு காவல் துறையினர் இவர்களைக் கைது செய்தனர்.

சென்னை அடையாறில் உள்ள திருமதி இந்திராகுமாரியின் வீட்டில் வைத்து இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாக மாநில புலனாய்வு காவல்துறைப் பொறுப்பாளர் கே. கே. ராஜசேகர நாயர் தெரிவித்தார்.

இந்திரகுமாரி மீதான ஊழல் குற்றச்சாட்டு பரவலாக எழுந்ததை அடுத்து கடந்த பொதுத் தேர்தலில் அ. தி. மு. க. சார்பில் போட்டியிடும் வாய்ப்பை வழங்க அப்போதைய முதல்வரும் அ. தி. மு. க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதா மறுத்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திராகுமாரியின் உதவியாளர் வெங்கட கிருஷ்ணனின் வீட்டில் சில தினங்களுக்கு முன்னர் சோதனை நடத்திய போது பெருந்தொகை அமெரிக்க டொலர் மற்றும் சிங்கப்பூர் டொலர் ஆகியவற்றை அதிகாரிகள் கைப்பற்றியதாகக் கூறப்படுகின்றது.

தமது பொறுப்பில் இருந்த ''கோ- ஆட் டெக்ஸ்' நிறுவனத்தின் சார்பில் வெளிநாடு ஒன்றில் நடந்த கண்காட்சியில் தமது உதவியாளர் வெங்கடகிருஷ்ணன் சகிதம் இந்திராகுமாரி கலந்து கொண்டாராம்.

அங்கு தமது செலவுகளை தமிழ் நண்பர்கள் சிலர் ஏற்றுக்கொண்டதால் தங்களுக்கு செலவு ஏதும் ஏற்படவில்லை என்று வெட்கடகிருஷ்ணன் கூறியுள்ளார்.

''உங்கள் உதவியாளரிடம் அந்நியச் செலாவணி எவ்வளவு அளித்தீர்கள்? எந்தெந்த நாடுகளுக்குச் சென்றீர்கள்?''— என்பது போன்ற விடயங்கள் சம்பந்தமாக இந்திராகுமாரியிடம் அமுலாக்கல் பிரிவினர் பல கேள்விகளைத் தொடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. (உ-3)

## 60 பேர் பலி

மேற்கு வங்காளத்தில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக கடந்த நான்கு நாள்களில் அறுபது பேர் வரை உயிரிழந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

அஸாமிலும் அருணாச்சலப் பிரதேசத்திலும் வெள்ள நிலைமை மேலும் மோசமாகி வருவதாகதெரிவிக்கப்பட்டது

### எட்டுத் தொழிற்சங்கங்களைச் சேர்ந்த

# ஆசிரியப் பிரதிநிதிகள் ஆயிரம் பேர் கலந்து கொள்ளும் மாநாடு நாளை

## கொழும்பு பொது நூல் நிலைய மண்டபத்தில்

கொழும்பு, ஜுலை 8

ஆசிரியர்கள், அதிபர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக எட்டு ஆசிரிய சங்கங்களின் ஆயிரம் பிரதிநிதிகள் பங்குபற்றும் தேசிய மாநாடு ஒன்று நாளை கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

இந்த மாநாட்டில் இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா தேசிய ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், அகில இலங்கை அதிபர் சேவைச் சங்கம், ஸ்ரீலங்கா ஐக்கிய ஆசிரியர் சங்கம், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் ஆகியன பங்குபற்றவிருக்கின்றன.

கொழும்பு பொது நூல் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறும் இந்த மாநாட்டில் பாடசாலை மாணவர்களின் போசாக்கு பாதிக்கப்படுவதால் மதிய போசனம் வழங்கும் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்படவிருக்கிறது.

ஆசிரியர்கள், அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைப்பது குறித்தும் —

உத்தேச அதிபர் சேவை தேசிய கல்விக் கொள்கை, தேசிய இடமாற்றம் போன்ற விடயங்கள் குறித்தும் —

இந்த மாநாட்டில் ஆராயப்படவிருக்கின்றது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### ஆங்கிலக் கல்வி

சுலபமான முறையில் விரைவாக ஆங்கிலம் பேசப்பயில ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, இல. 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சிறு குறூப்பாக மட்டும்)
(41815)

### BRIGHTON INSTITUTE

சகல பாடங்களுக்குமான 6 – 11ம் ஆண்டுகளுக்கான வகுப்புகள் சிறந்த அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழுவால் நடத்தப் பெறுகிறது. Maths அடிப்படையிலிருந்து சிறந்த பேறுபெற கற்பிக்கப்படும், FLETCHERS LANE Chundikuli, Jaffna (41733)

### மீண்டும் இயங்குகிறது

மீண்டும் யாழ் நகரில் புதிய தமிழ் வீடியோ படங்களை ஒறிஜினல் பிரதி மூலம் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்: றீகல் வீடியோ மூவிஸ், ஈச்சமோட்டை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (மினி சினிமாக்காரர்களுக்கு ஒறிஜினல் கொப்பி தரப்படும்.)
(41797)

### O/L கணிதம்

Distinction Credit பெறுபேறடைய இதுவரையும் ஆரம்ப அறிவில்லாதவர்களுக்கும் கற்பிக்கப்படும். London Inter ஆசிரியர், 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (41807)

### மணிக்கூடு திருத்துதல்

சகல விதமான மணிக்கூடுகளும் சிறந்த முறையில் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். பழுதடைந்த கடிகாரங்கள் உதிரி பாகத்திற்காக வாங்கப்படும். சுஜன்ஸ் வாச் வேக்ஸ், 55, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (அரசாங்க வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு அருகாமை) (41837)

### கணிதம்

ஆண்டு 11 மற்றும் ஆண்டு 10 மாணவர்களுக்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும் தனியாக வினா விடை வகுப்புகளுக்கும் தொடர்பு கொள்ளலாம். இல:- 503 மே/பா உதயன் பணிமனை நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(41824)

### WANTED

Wanted Immediately a Visiting Lecturer in Computer Qualification Degree/ Bcs/ Higher Diploma. Excellent Salary and Carrier Prospects. Walk in interview on 21 and 22 July between 9 a.m to 11 a.m at: Institute of Informaties Studies No:- 68 Clock-Tower Road, Jaffna. (41804)

### மணமகன் தேவை

செவ்வாய் 2 இல் உள்ள 35 வயதுப் பெண் ஆசிரியைக்கு அரசாங்க, தனியார் தொழில் புரியும் ஓரளவு கிரக பாவம் கொண்ட மணமகன் தேவை. சாதக விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். மே/பா உதயன் இல – 503
(41833)

**விக்னா**
**கல்வி**
**நிறுவனம்**
**A/L 96, 97**
கலை, வர்த்தக
வகுப்புக்கள்
ஆரம்பமாகி விட்டன.
(C/2634)

### விற்பனைக்கு

புதிய நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு. 3 H. P என்பீல்ட் தொடர்பு:- மணியம் ஸ்ரோர்ஸ் சாவகச்சேரி. (சி- 2642)

4 கினி கோழிகள், 2 வெள்ளைச் சேவல், 2 கறுப்பு பேடு, 10 கினி கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு நவரதராசா, ராஜ்கோபால்ஸ் களஞ்சியம். (மட்டுவில்) உபதபாற் கந்தோர் முன்பாக) மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (41823)

வீட்டுத்தளபாடங்கள் உட்பட சகல விதமான பாவனைப் பொருள்கள், மின்சாதனப் பொருள்கள், HONDA C 70 (First Owner) விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு பார்வையிடலாம். திருமதி வேலாயுதம்பிள்ளை, உப்புமடச்சந்தி, K K. S வீதி கோண்டாவில். (41838)

### தவறிவிட்டது

பலாலி கிழக்கு வயாவிளானைச் சேர்ந்த இரத்தினம் செல்லம் ஆகிய எனது அடையாள அட்டை இல. 457200434 V அச்சுவேலி சந்தைக்கு சமீபமாக தொலைந்து விட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஆவரங்கால் உபதபாற் கந்தோரில் ஒப்படைக்கவும்.
(41836)

20. 4. 96 அன்று ஜனார்த்தனன் என்ற லான்ட் மாஸ்ரரில் மீசாலையிலிருந்து கச்சாய் ஊடாகக் கொடிகாமத்திற்குச் சென்ற போது ஆடைகள் கொண்ட உரப்பை மூடை ஒன்றும், சில பொருள்களும் தவறி விட்டன. கண்டெடுத்து வைத்திருப்போர் தயவு செய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். எஸ். பத்மநாதன், ''சிவபதி'', சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.
(41813)

### மீண்டும் ஆரம்பம்

சிவாஸ் மணிக்கூட்டுத் தொழிலகம் 568 B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சகல விதமான மணிக்கூடுகளும் திருத்திக் கொடுக்கப்படும். (41732)

யாழ்ப்பாணம் வண் – கிழக்கு
கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்பாள்
(கலட்டி அம்மன் தேவஸ்தானம்)

## ரதோற்சவத் திருவிழா

மேற்படி ஆலயத்தின் ரதோற்சவ திருவிழா எதிர்வரும் **19 07 96** ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை **7.00** மணிக்கு சங்காபிஷேகம், காலை **9 30** மணிக்கு வசந்தமண்டப பூஜை ஆகியவற்றுடன் ஆரம்பித்து பகல் **10 15** மணிக்கு இரதாரோகணமும், பகல் **12.00** மணிக்கு அவரோகணமும் நடைபெற்று அதைத் தொடர்ந்து நவசக்தி பூஜையும் நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

பரிபாலனசபை.

(41828)

## ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

### ஆடிப்பூரம் - கோபுர அபிஷேகம்

மெய்யன்பர்களே,

மேற்படி விழாக்கள் 20 - 07 - 96 சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கும் 12 மணிக்குமிடையில் அபிஷேக ஆராதனைகளுடன் நிகழும். அன்படியார்கள் தரிசனை செய்து திருவருள் பெறுமாறு தெரிவிக்கிறோம்.

எமது தேவஸ்தானத்தின் வழமையான உபயகாரர்கள் தங்கள் தற்போதைய முகவரியை எமக்கு அறியத்தந்து தொடர்பு கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பொ. ப. சபையார்

நாகேஸ்வரம்,
அளவெட்டி. (41795)

## 90- ம் நாள் நினைவஞ்சலி

### திருமதி சுப்ரமணியம் மகேஸ்வரி

தோற்றம்: 12 – 09 – 1931
மறைவு: 20 – 04 – 1996

திதி 18 - 07 - 96

கண்மூடி திறப்பதற்குள் சென்று விட்டீர்
எங்களை விட்டு நீங்கள் எங்களிடமிருந்து
பிரிந்து சென்றது ஏன் என்று — எங்கள்
உள்ளங்கள் ஏங்கி நிற்க
உமது பிரிவால் துயர் தாங்காது
நித்தமும் உமது நினைவால் ஏங்கித் தவிக்கும்
உள்ளங்கள் பல இங்கு — உமது ஆத்மா
சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

உமது பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

மகாமாரி லைற்,
வரியப்புலம்,
சுன்னாகம். (41816)

## பரீட்சைக் கடமைக்கான கொடுப்பனவு அதிகரிப்பு

வலி. தெற்கு ஜூலை 18

பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுவோருக்கான கொடுப்பனவுகளை பரீட்சை திணைக்களம் 25 ரூபாவினால் அதிகரித்துள்ளது.

ஒவ்வொரு தரத்தினருக்கும் வழங்கப்பட்டு வந்தபரீட்சைக் கொடுப்பனவுகளில் மாற்றம் செய்யப்பட்டு இவ்வதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கான நாளாந்த கொடுப்பனவுகள் 200 ரூபாவாகவும் —

நிரந்தர நோக்குநர்களின் கொடுப்பனவுகள் 175 ரூபாவாகவும் —

சாதாரண நோக்குநர்களின் கொடுப்பனவுகள் 150 ரூபாவாகவும் —

பணியாளர்களின் கொடுப்பனவுகள் 125 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

(உ 152)

## நெடுந்தீவுக்கு அரிசி

நெடுந்தீவில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையை அடுத்து 350 மூடை அரிசி அங்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

சீனி, மாவு உட்பட ஏனைய அத்தியாவசிய பொருள்களையும் தாமதமின்றி எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நெடுந்தீவு ப. நோ. கூ. சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

## அந்தியேட்டி அழைப்பு

20-04-96 இல் அகாலமரணம் எய்திய

### அமரர் சி. இராசரத்தினத்தினதும், அவர் மகள் சௌசலாதேவியினதும்

அந்தியேட்டிக் கிரியை **19-07-96** வெள்ளிக்கிழமை சிறுப்பிட்டிமேற்கு கௌரகிரியில் நிகழவிருப்பதால் அத்தருணம் சுற்றத்தவர், நண்பர்கள், அயலவர்கள் எல்லோரும் சமூகம் தந்து அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். மதியபோசனத்தில் கலந்து சிறப்பிக்கவும்.

''கௌரகிரி''
இராச வீதி,
சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

இங்ஙனம்:
மனைவி, மக்கள்,
உறவினர்.

(41840)

## அந்தியேட்டி அழைப்பு



ஆசிரிய சிரோமணி
அமரர்

### இராமலிங்கம் அப்பாத்துரை

தோற்றம்: **19 – 07 – 1914**
மறைவு: **18 – 06 – 1996**

18 06-1996 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 18-07-1996 நடைபெற இருப்பதால் எமதில்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

திருமதி. அ. அன்னலட்சுமி
(குடும்பத்தார்)

''திருமந்திரம்''
பண்ணாகம். (41748)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## போரும் செலவும்

சுதந்திரத்துக்குப் பிந்திய நாற்பத்தெட்டு வருட காலத்தில் என்றுமே இல்லாதவாறு ஸ்ரீலங்கா அரசாங்கம் மிகப் பயங்கரமான நிதி நெருக்கடியை எதிர்நோக்குவதாக அறிவிக்கப்படுகிறது.

பிரதி நிதி அமைச்சரும், வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் பெரும் பொறுப்பில் மாட்டிக்கொண்டுள்ளவருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இதனை வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார்.

வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் இக்கட்டான நிலை தற்போதுள்ளது போன்று என்றுமே ஏற்பட்டதில்லை. ஏனெனில் நாம் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்குப் போருக்கான செலவு படிப்படியாக அதிகரித்துக் கொண்டே செல்கிறது — என்று அவர் வாய்விட்டுக் கவலைப்பட்டுள்ளார்.

போருக்கான செலவு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருப்பது ஒன்றும் புதியதல்ல 1983ஆம் ஆண்டிலிருந்து போர்ச் செலவின் வரைபு உச்சத்தை நோக்கி உயர்ந்து கொண்டே இருக்கிறது. மிகக் குறிப்பாக 1990 ஆம் ஆண்டின் பின்னர் போர்ச் செலவினம் உயர்ந்து ஊதிப் பருத்து வருகிறது அதற்கு எல்லை இல்லை என்றளவுக்கு தங்கு தடையின்றி மிக வேகமாக வளர்ந்து செல்கிறது.

போர் தொடர்வதால் நாட்டின் பொருளாதாரம் நலிந்து வருவதாக, கடந்த நான்கு, மூன்று வருடங்களாக தென்னிலங்கையில் மேடை மேடையாகப் பேசப்படுகிறது. போரை நீடிப்பதனால் அபிவிருத்தி வேலைகள் தடைப்படுவதாகவும், மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்ந்து ஏழ்மை மலிந்து வருவதாகவும் கொழும்புப் பத்திரிகைகளில் கற்றை கற்றையாக எழுதப்படுகிறது.

ஆனால் போரை நிறுத்துவதில் பிரேமதாச அரசோ, விஜேதுங்கா அரசோ, சந்திரிகா அரசோ மனதார அக்கறை கொண்டு செயற்படவில்லை. தமிழர்களின் உரிமைகளை வழங்காமல், அவர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிட வேண்டும் என்று அரச தலைவர்கள் எண்ணியதாலேயே போர் நீண்டது; இப்போதும் தொடர்கிறது.

அரசாங்கம் நினைத்தால் போரை நிறுத்தலாம். அதற்குச் செலவாகும் நிதியை மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்குப் பயன்படுத்தலாம். அவர்களின் பல கஷ்டங்களைத் தீர்க்கலாம். பல அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தலாம்.

ஆயினும் அதற்கான உளமார்ந்த அக்கறை தெற்கின் அரசியல் தலைவர்களிடம் காணப்படவில்லை. எல்லாம் வெறும் பேச்சிலும், எழுத்திலுமே.

தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்கி போருக்கு முற்றுப்புள்ளி வைக்கும் அரசியல் துணிவு இல்லாத கோழைகளாக — நாட்டைவிட வாக்குகளிலேயே கண் வைப்பவர்களாக — தெற்குத் தலைவர்கள் இருக்கும் வரை போர் தொடரவே செய்யும், பொருளாதாரம் படுபாதாளத்தில் விழும். அதனைத் தடுக்க, நாட்டைக் காப்பாற்ற, இதயபூர்வமாக விரும்பினால் அரசு போரை உடனடியாக நிறுத்த வேண்டும்.

# தடுத்து வைக்கப்பட்டுள்ள கப்பலில்
# மேலும் வெடிமருந்துப் பொருள்கள்

## தாய்லாந்திடமிருந்து கடிதம் எதிர்பார்க்கும் அதிகாரிகள்

கொழும்புத் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பனாமா நாட்டைச் சேர்ந்த 'அலக்சாண்திரா' கப்பல் முழுமையான பரிசோதனைக்கு உள்ளாகியிருக்கிறது. கடைசியாக சோதிக்கப்பட்ட 4 கொள்கலன்களிலும் கூட வெடிமருந்துப் பொருள்கள் இருந்ததாக சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்தக் கப்பலில் இருந்த பொருள்கள் தாய்லாந்துக்கு கொண்டு செல்லப்படவிருந்தனவா என்பது பற்றித் தாய்லாந்து அரசாங்கத்திடம் இருந்து கடிதம் தேவைப்படுகிறது.

கொழும்பில் உள்ள அதிகாரிகள் இந்தக் கடிதத்தை எதிர்பார்த்திருக்கிறார்கள்.

இந்தக் கடிதம் கிடைத்ததும் கப்பல் விடுவிக்கப்படும்.

இஸ்ரேலில் இருந்து தாய்லாந்துக்குச் செல்லும் வழியில் எரிபொருள், தண்ணீர் ஆகியவற்றை நிரப்பிக் கொள்வதற்காக இக்கப்பல் கொழும்புத் துறைமுக வளவுக்குள் வந்தது.

இந்தக் கப்பலில் இருந்த மாலுமிகள் சரியான தகவலைத் தெரிவிக்காததால் கப்பல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(இ-3)

## குடிசை எரிந்தது

குடும்பத் தகராறு காரணமாக கணவனைப் பிரிந்து தனியாக — குடிசையில் வாழ்ந்த பெண் ஒருவரின் குடிசை எரிந்து சாம்பரானது.

இச்சம்பவம் சாவகச்சேரி, செருக்கல் பிள்ளையார் கோவில் வீதியில் இடம் பெற்றது. (இ-3)

## பண்டைக் கால கல்லறைகள்

கெய்ரோ, ஜூலை 18

சூயஸ் கால்வாய்க்கு அருகே உள்ள இஸ்ரேலியா நகரத்தின் பண்டைக்காலக் கல்லறைகளை எகிப்தின் தொல்லியல் ஆய்வு நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

இவை கி-மு. 4 ஆயிரம் ஆண்டைச்சேர்ந்தவை எனச் சொல்லப்படுகிறது.

பண்டைக்கால மனித எலும்புக்கூடுகளும் மட்பாண்டத் துண்டங்களும் விலங்குகளின் எலும்புக்கூடுகளும் இங்கே இருந்தன

(இ-3)

## ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சை:
## விண்ணப்பப் படிவங்கள் கல்வி அலுவலகங்களுக்கு

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறும் ஜி. சீ. ஈ. (சாதாரண தர) பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் நேற்று கல்வி வலயம் ஒன்று அலுவலகத்தால் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்கள் உடனடியாக விண்ணப்பப்படிவங்களை பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு கல்வி அலுவலகம் கேட்டுள்ளது.

(இ-51-117)

## எவ்.எக்ஸ்.சி. நடராஜாவுக்கு கலாநிதிப் பட்டமளிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 18

மட்டக்களப்பின் முது பெரும் தமிழ் அறிஞரான மகாவித்துவான் எவ். எக்ஸ். ஸி. நடராஜாவுக்கு கிழக்குப் பல்கலைக் கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கத் தீர்மானித்துள்ளது

பல்கலைக் கழக மூதவையும், ஆலோசனைச் சபையும் இதனை ஏகமனதாக அங்கீகரித்துள்ளன.

இம்மாதம் 25 ஆம் திகதி கல்லடி விபுலானந்தா இசை நடனக் கல்லூரி இராசதுரை அரங்கில் நடைபெறவுள்ள கிழக்கு பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவின்போது மகாவித்துவான் நடராஜாவுக்கு கலாநிதிப் பட்டம் வழங்கப்படும்.

இவர் 1992 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினால் ''கலாசூரி'' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கிழக்குப் பல்கலைக் கழகம் வழங்கும் முதலாவது கௌரவ கலாநிதிப் பட்டம் இதுவாகும்.

மகாவித்துவான் எவ் எக்ஸ் ஸி. நடராஜா காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவராவார்.

(உ-10)

# நூற்றாண்டு ஒலிம்பிக் போட்டிகள்
# நாளை கோலாகலமாக ஆரம்பம்

அமெரிக்காவிலுள்ள ஜோர்ஜியா மாநிலத்தில் அமைந்துள்ள அட்லாண்டாவில் நாளை ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

1896 ஆம் ஆண்டு நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பித்து நூற்றாண்டைப் பூர்த்தி செய்யும் போட்டியாக இந்த அட்லாண்டா ஒலிம்பிக் போட்டி அமைகிறது.

### ஐயாயிரம் வீரர்கள் களத்தில்

1896 இல் நடைபெற்ற முதலாவது நவீன ஒலிம்பிக்போட்டியில் 13 நாடுகள் மட்டுமே கலந்து கொண்டன. ஆனால் நாளை ஆரம்பமாகவுள்ள அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிகளில் 197 நாடுகள் கலந்து கொள்ளவுள்ளன. அத்துடன் முதன் முறையாக 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொள்ளும் போட்டியாகவும் இது அமைகிறது.


அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிகளில் பீச் கரப்பந்தாட்டம், பெண்களுக்கான உதைபந்தாட்டம் ஆகிய இரு புதிய விளையாட்டுகள் அறிமுகப்படுத்தப் படுகின்றன.

### ஸ்ரீலங்கா அணி

'சார்வ்' மற்றும் அணிசேரா அமைப்பு நாடுகளுக்கிடையேயான போட்டிகளில் தங்கப் பதக்கங்களை வென்ற வீராங்கனை புஷ்பமாலி ராமநாயக்கா ஏழு பேர் கொண்ட சிறிலங்கா அணிக்குத் தலைமை தாங்குகிறார்.

ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்கள், வீராங்கனைகள் பிரார்த்தனை செய்வதற்காக பௌத்த, கிறிஸ்தவ, யூத, இஸ்லாம், இந்து மத வழிபாட்டு ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

போட்டிகளிக் கலந்து கொள்ளும் பல நாடுகளுக்கிடையே அரசியல் ரீதியாக முரண்பாடுகள், பகையுணர்வுகள் உள்ளன. இவ்விடயம் குறித்தும் போட்டி அமைப்பாளர்கள் விசேட கவனம் செலுத்தியுள்ளனர். பாலஸ்தீனிய, இஸ்ரேல் குழுக்கள் மற்றும் ஈராக், குர்திஷ் குழுக்களுக்கு வேறுபட்ட இடங்களில் விடுதிகள் வழங்கப்பட்டுள்ளன.



### — அமுதன் —

ஒலிம்பிக் போட்டிகளை ஒளிபரப்புச் செய்வதற்காக பல ஒளிபரப்பு நிறுவனங்கள் பலகோடி ரூபாவுக்கு ஒளிபரப்பு உரிமைகளை வாங்கியுள்ளன.

இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனமும் ஒலிம்பிக் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பவுள்ளது.

ஆரம்பவிழா நாளை இரவு (19 ஆம் திகதி) நடைபெறவுள்ளதால் பத்தரை மணித்தியால வித்தியாசத்தைக் கொண்ட இலங்கை நேரபடிப் மறுதினமான சனிக்கிழமை காலை 6-00 மணிக்கு அவ்வைபவம் இங்கு ஒளிபரப்பப்படும் இதன் மறு ஒளிபரப்பை அன்று மாலை 4-00 மணிக்கு ரூபவாஹினி மேற் கொள்ளும்.

இதே போன்று ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி நடைபெறும் முடிவு விழா இலங்கை நேரப்படி மறுதினமான 5 ஆம் திகதி காலை 7-00 மணிக்கு ஒளிபரப்பப்படும்.

நாளாந்தம் இடம்பெறும் முக்கிய நிகழ்வுகள் தொகுக்கப்பட்டு ஜூலை 21ஆம் திகதியிலிருந்து ஆகஸ்ட 5 ஆம் திகதிவரை மாலை 6-45 மணிக்கு ரூபவாஹினியில் ஒளிபரப்பப்படும் இந் நிகழ்ச்சி ஒவ்வொரு மறுதினமும் மாலை 4-00 மணிக்கு ஒளிபரப்பாகும்.

ஹாக்கி இறுதி 'ஆட்டம் ஆகஸ்ட் 3 ஆம் திகதி மாலை 3-00 மணிக்கும் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி ஆகஸ்ட் 4 ஆம் திகதி மாலை 3-00 மணிக்கும் நேரடியாக ஒளிபரப்பாகும்.

### ஸ்டெபி கிறாவ் ''அவுட்!''

இம்மாதம் முடிவடைந்த விம்பிள்டன் போட்டியில் பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தை வென்றவரும் ஒலிம்பிக் டெனிஸ் வீராங்கனையுமான ஸ்ரெபிகிறாவ் நாளை ஆரம்பமாகவுள்ள அட்லான்டா ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ள மாட்டார். அவருக்கு முழங்காலில் ஏற்பட்ட வலியே இதற்குக் காரணமாகும். இம்முறை விம்பிள்டனில் பெற்ற வெற்றியுடன் ஸ்ரெபி கிறாவ் டெனிஸ் விளையாட்டில் 100 ஆவது பெரு வெற்றிகளைப் பெற்றுள்ளார். நவீன ஒலிம்பிக் போட்டிகளின் 100ஆவது ஆண்டுப் போட்டிகளில் ஸ்ரெபி கிறாவ் பங்கு பற்ற முடியாமற்போனது துர்ப்பாக்கியமே.

# ஒலிம்பிக் காலத்தில் யுத்த நிறுத்தம் செய்க!

## ஐ. நா. தலைவர் வேண்டுகோள்

நாளை ஆரம்பமாகும் ஒலிம்பிக் போட்டிகளின் போது பண்டைய ஒலிம்பிக் பாரம்பரியத்தைக் கடைப்பிடித்து போர் நிறுத்தத்தை அவதானிக்க வேண்டும் என்று ஐ. நா. தலைவர் சகல நாடுகளையும் கேட்டுள்ளார்.

கிறிஸ்துவுக்கு முன் 9 ஆம் நூற்றாண்டில் ஒலிம்பிக் போட்டிகளின் போது யுத்த நிறுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனவே நாடுகள் மோதலில் ஈடுபட்டாலும் கூட ஈடுபடாவிட்டாலும் கூட நிரந்தர சமாதானத்தை அடைய முயற்சியாக போர் நிறுத்தத்தை கடைப்பிடிப்பது அவசியமாகும் — என்று அவர் கேட்டுள்ளார். (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் தீர்வு யோசனை குறித்து ஐ.தே.க.வின் நிலைப்பாடு என்ன?

## நேற்று உயர்மட்டக் குழு கூடி ஆராய இருந்தது

கொழும்பு, ஜூலை. 18

இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைத்திருக்கும் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் தொடர்பாக உறுதியான நிலைப்பாடு ஒன்றினை எடுப்பதற்காக ஐ. தே க. வின் உயர் மட்டக் குழு ஒன்று நேற்றுக் கூடவிருந்தது.

இன நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கான பிரயத்தனங்களைப் பொறுத்த வரையில் ஐ. தே. க. வுக்குள் இருக்கும் ஒரு சாரார் ஒற்றையாட்சி முறையை மாற்றக் கூடாது என்று வலியுறுத்துகின்றனர்.

அக்கட்சிக்குள் இருக்கும் சிறுபான்மை இனப் பிரதிநிதிகள் ஒற்றையாட்சியை மாற்ற வேண்டும் என்று கூறுகிறார்கள்.

இதே வேளை—இன்னொரு சாரார் பிளவு படாத இலங்கை என்ற ஒரு தெளிவற்ற நிலைப்பாட்டினை வலியுறுத்துகிறார்கள். (இ-3)

## கணேசலிங்கத்துடன் ரணில் இன்று நேரில் பேசுவார்

கொழும்பு, ஜூலை 18

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் மற்றும் ஒற்றையாட்சி ஆகியவை தொடர்பாக ஐ.தே.க. வின் பொருளாளரும்,மாநகரமுதல்வருமான கே. கணேசலிங்கம் தெரிவித்துள்ள கருத்துக்கள் தொடர்பாக ஐ. தே. க. வின் தலைவர் ரணில்விக்கிரமசிங்க இன்று முதல்வரை அழைத்து பேச்சு நடத்தவிருக்கிறார்.

ஐ. தே. க. தலைமையலுவலகத்தில் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக வர்த்தகப்பிரமுகர்களை அழைத்து ரணில் பேச்சு நடத்தினார்.

அதன் பின்னர் ஐ.தே.க. எம். பிக்கள் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து, முதல்வர் கணேசலிங்கம் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாகக் கண்டனம் தெரிவித்தனர் என்று தெரிய வருகின்றது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டுமானால் ஒற்றையாட்சியை வலியுறுத்தும் அரசமைப்புச் சரத்துக்களில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று கணேசலிங்கம் கருத்துத்தெரிவித்திருந்தார். (இ-3)

## தாதிமார் சம்பளம் முரண்பாடு நீங்கும்

### அமைச்சர் பௌசி இணக்கம்

கொழும்பு, ஜூலை 18

தாதிமாரின் சம்பள முரண்பாடுகளை இம்மாத இறுதிக்கு முன்னர் நீக்குவதற்கு சுகாதார அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி இணங்கியுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கு யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அனுமதி கிடைத்ததும் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

தாதிமார் சங்கத்துடன் நடைபெற்ற சுமுகமான கலந்துரையாடலின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் இந்த உறுதிமொழியை அளித்திருப்பதன் காரணமாக தொழிற்சங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கமாட்டாது என்று அதன் தலைவர் முறக்கொட்டுவ ஆனந்த தேரர் தெரிவித்தார்.

தாதிகளின் மற்றும் பல கோரிக்கைகள் பற்றியும் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (இ-4)


## தேவை

தோட்ட வேலையில் நல்ல அனுபவமுள்ள ஒருவர் உடனடியாகத் தேவை. பூந்தோட்டங்களைப் பராமரிப்பதில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை உண்டு.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். அலுவலக நேரங்களில் அனுபவச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

முகாமையாளர் (நிர்வாகம்)
உதயன் பணிமனை,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்


## மரண அறிவித்தல்

### எஸ். ஜெயசிங்கம்

பிரபல வழக்கறிஞரும் கட்டைவேலி கிராம சபை முன்னாள் தலைவருமான எஸ். ஜெயசிங்கம் 06-06-96 இல் ஆஸ்திரேலியாவின் அடிலயிட்டில் காலமானார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
எஸ். சோமநாதன்
(சகலன்)

பொலீஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி.

(C/ 2646)

## கிளிநொச்சி உணவு விநியோகம் மிகவும் மோசம் எனத் தகவல்

கிளிநொச்சி மாவட்டத்துக்கான உணவு விநியோகம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அந்த மாவட்டத்துக்குத் தேவைப்படும் குறைந்தபட்ச உணவு அளவை விட மிகக் குறைந்த அளவு உணவையே கொழும்பு அதிகாரிகள் அனுப்புகிறார்கள் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவிக்கிறது.

அனுமதிக்கப்படும் இந்த உணவு கூட தாண்டிக்குளம் இராணுவ தடைமுகாம் ஊடாக கிளிநொச்சி வர காலதாமதம் ஆகிறது என்றும்—

தேவையற்ற சோதனைகள் நீண்ட பயணங்கள் காரணமாக ஏராளமான உணவு வீணடிக்கப்படுகிறது என்றும்—

மே மாதத்துக்குரிய உணவுக் கோட்டா 2 மாதத்துக்கு பின்னர் இப்போதுதான் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார் என்று வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது.

## போதைப்பொருள் கடத்தல் கோஷ்டி; உஷாராகும்படி இந்தியா எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 18

போதைப் பொருள்களான ஹரோயின், கஸீஸ், போலி அமெரிக்க டொலர் நோட்டுக்கள், போலி இந்திய கரன்ஸி நோட்டுக்கள், தங்க பிஸ்கட் ஆகியவற்றை பெருமளவில் கடத்தும் கோஷ்டி ஒன்று குறித்து இந்திய சுங்க அதிகாரிகளும் உளவு அறியும் ஏஜென்ஸியினரும் எச்சரித்துள்ளனர்.

இந்தியா, பூட்டான், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நான்கு நாடுகளிலும் உள்ள சுங்க அதிகாரிகளுக்கு உஷாராக இருக்குமாறு அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள திருச்சிராப்பள்ளியில் இருக்கும் குமரன் நகரில் இலங்கையருடன் நெருங்கிய தொடர்புடைய பெண் ஒருவர் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹரோயினுடன் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இந்தக் கள்ளக்கடத்தல் மோசடி அம்பலத்துக்கு வந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களாக இப்படியான சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நன்கு திட்டமிட்டுச் செயற்படும் கோஷ்டி ஒன்று இந்த கள்ளக்கடத்தல் வேலைகளில் ஈடுபட்டு வருகிறது என இந்திய அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். (இ-3)

### படையை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோடியோர் உள்ள ஒரு நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரிப்பதில் வியப்பு ஏதுமில்லை.

படைகளை விட்டுத்தப்பியோடியோருக்கு மன்னிப்பு அளித்து படைகளில் மீண்டும் அவர்களைச் சேர்க்கும் திட்டத்தின் நோக்கங்களில்—

அத்தகையோர் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் தடுப்பதும் ஒன்றாகும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க தெரிவித்தார்.

— இவ்வாறு பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. (உ-3)

### லங்கா முடித..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்ததும், தபால் பொதிகள் எடுத்துச் செல்வதில், யாழ். பிரதம தபாலகம் இதுவரை எதிர் நோக்கிவந்த பிரச்சினைகள் நீங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. இறக்கும் வேலைகள் ஆரம்பமானதும் தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டு தரம்பிரிக்கப்பட்டு உரியவர்களுக்கு அவற்றை விநியோகிக்கும் வேலைகள் நடைபெறுமென யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

அதேசமயம் எதிர் வரும் திங்கட்கிழமை காங்கேசன் துறை முகத்திலிருந்து புறப்படும் என எதிர்பார்க்கப்படும் 'நியூகோ என்டுறன்ஸ்' என்ற கப்பலில் 27 வெளியூர் தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட இருக்கின்றன.

அடுத்த சில தினங்களில் காங்கேசன் துறையில் இருந்து புறப்படவுள்ள மற்றுமொரு கப்பலிலும் தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

### வாகன ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் தற்காலிக பதிவுகளை மேற்கொண்ட வாகனங்களுக்கு இந்த வாகன வரிப்பத்திரத்தைப் பெறமுடியும்.

மோட்டார் சைக்கிள், ஓட்டோ தவிர்ந்த ஏனைய வாகனங்களுக்கு பதிவுப் புத்தகம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே வரிப்பத்திரம் வழங்கப்படும்.

பதிவுப் புத்தகம் இல்லாதவர்கள் கொழும்பு,நாரஹேன்பிட்டியாவில் உள்ள மோட்டார் ஊர்தி பதிவுத் திணைக்களத்துடன் நேரடியாகத் தொடர்புகொண்டு பதிவுப் புத்தகத்தின் பிரதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ். செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் —

விண்ணப்பம் அனுப்புபவர்கள் பதிவுப் புத்தகம் தொலைந்ததற்கான பொலீஸ் முறைப்பாட்டு அறிக்கையையும் இணைத்து அனுப்புதல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## மட்ராஸ் அல்ல சென்னையே

சென்னை, ஜூலை 18

சென்னை நகரத்தின் பெயர் இனிமேல் எல்லா மொழிகளிலும் சென்னை என்றே அழைக்கப்பட வேண்டும் என தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ் தவிர்ந்த ஏனைய மொழிகளில் இப்போது சென்னை ''மட்ராஸ்'' என்றே அழைக்கப்படுவதும் எழுதப்படுவதும் வழக்கம்.

இனி சகல மொழிகளிலும் அதுசென்னை என்றே அழைக்கப்படும், எழுதப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

## அலங்கார உற்சவம்

சாவகச்சேரி டச்சு வீதி அருள்மிகு ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமானது. உற்சவம் தொடர்ந்து 17 நாட்கள் நடைபெறும்.

ஸ்ரீ பழனி வேல் பவனி இம மாதம் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (அ-31)

### இணைப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலை வழங்கும் திட்டத்துக்கு ஐ தே. க. ஆதரவளிப்பதாக அவர் அங்கு குறிப்பிட்டார்.

அதன் பின்னர் ஜனாதிபதியுடனான தனது பேச்சுக்களின் போது இடம்பெற்ற விடயங்களை ரணில் பிரஸ்தாபித்தார்.

வடக்கு - கிழக்கு இணைப்பு இருக்கவே இருக்க முடியாது என்பதற்கு அந்தப் பேச்சுக்களின் போது ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார்.

''இணைப்புக் குறித்து கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அதனடிப்படையில் முடிவு எடுக்கப்பட வேண்டும் என்பதே ஐ. தே. கவின் நிலைப்பாடு என்று நான் அவரிடம் கூறினேன்.'' — என்றார் ரணில்.

ஆனால் வடக்கு — கிழக்கு இணைப்பு இடம் பெற முடியாது என்று சந்திரிகா கூறினார். அந்தச் சந்திப்புக் குறித்து பல விடயங்கள் கூறப்படுகின்றன. ஆனால் தேசிய நலன் கருதி அவை குறித்து நான் மௌனம் சாதிக்கிறேன்.

'இந்தச் சந்திப்பின் போது ஜனாதிபதி கூறிய பலவிடயங்களை அம்பலப்படுத்துவதன் மூலம் நான் அரசியல் லாபம் தேட முடியும். ஆனால் சகல தரப்பினரினதும் நன்மை கருதி நான் அப்படிச் செய்ய முயலவில்லை. '— என்று ரணில் அங்கு கூறியதாக ,சுரநிமல' தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் (உ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 18-07-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org